கற்றல் கையேடு

புவியியல்

தரம் 7

- 2015 முதல் நடைமுறைப்படுத்தப்படும் புதிய பாடத்திட்டத்திற்கமைவானது.
- பாடநூல், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி என்பவற்றிற்கேற்ப தயாரிக்கப்பட்டது.

நா.செல்வச்சந்திரன்

ஆக்கம் :- நா.செல்வச்சந்திரன்

ஆசிரியர் யா/அராலி இந்துக் கல்லூரி.

அலகு 1

நாம் வாழும் புவிக்கோளம்

01 இயற்கையின் அற்புத உருவாக்கமாக அமைவது எது?

நாம் வாழும் புவிக்கோளம்

02 உயிரினங்கள் வாழ்கின்ற கோள் எது? புவி

03 புவியில் உயிரினங்கள் வாழ்வதற்குக் காணப்படும் சாதாகமான சூழல்கள் எவை?

1 நீர் இருத்தல்.

2 சுவாதித்தலுக்குத் தேவையான வளி இருத்தல்.

3 புவி ஈர்ப்புச் சக்தி இருத்தல்.

04 புவிச் சுழற்சி

- புவி தனது அச்சில் சுழலுதல்.
- புவிச்சுழற்சிக்கு எடுக்கும் காலம் 24 மணித்தியாலங்கள் (1 நாள்)
- புவிச் சுழற்சியால் இரவு, பகல் வேறுபாடுகள், பிரதேசங்களுக்கிடையிலான நேர வேறுபாடுகள் என்பன ஏற்படும்.

நாவலப்பிட்டி

05 புவிச்சுற்றுகை

- புவி தனது அச்சில் சுழன்றவாறு சூரியனைச் சுற்றி வருதல்.
- புவிச்சுற்றுகைக்கு எடுக்கும் காலம் 365 நாட்கள் (1வருடம்)
- புவிச்சுற்றுகையால் பருவகால வேறுபாடுகள் ஏற்படும்.

புவியின் வடிவம்

06 புவியின் வடிவம் என்ன? கோள வடிவம்.

07 புவி கோள வடிவமானது என்பதற்கான ஆதாரங்கள் எவை?

1 தூரத்தில் வானமும் கடலும் ஒன்றையொன்று தொடுவது போல இருத்தல்.

2 தூரத்தில் வரும் கப்பலொன்றின் உயர்ந்த பகுதி முதலில் தெரிதல்.

3 மகலனின் கடற்பிரயாணம்.

4 விண்ணில் இருந்து எடுக்கப்பட்ட படங்களில் புவி கோளவடிவானதாக இருத்தல்.

08 புவி முழுமையான கோள வடிவம் எனக் கூறமுடியாமைக்கான காரணம் யாது

- புவியின் மத்தியகோட்டு விட்டம் 12757 கி.மீற்றர்
- புவியின் முனைவு விட்டம் 12714 கி.மீற்றர்
- இவை இரண்டுக்கும் இடையில் 43 கி.மீற்றர் வேறுபாடு காணப்படுகின்றமையால் முழுமையான கோள வடிவம் அல்ல

09 புவியின் சுற்றளவு

- மத்திய கோட்டுச் சுற்றளவு 40077 கி.மீற்றர்
- முனைவுச் சுற்றளவு 39943 கி.மீற்றர்

10 புவி மேற்பரப்பின் பரப்பளவு எவ்வளவு?

510 மி.சதுர கி.மீற்றர்

11 புவிக்கோளத்தில் கற்பனையாக வரையப்பட்டுள்ள கோடுகள் எவை

1 கிடையாக வரையப்பட்டுள்ளவை – அகலக்கோடுகள்


2 நிலைக்குத்தாக வரையப்பட்டுள்ளவை – நெடுங்கோடுகள்

12 அகலக்கோடுகள்(அகலாங்குகள்)

நா.செல்வச்சந்திரன்

- மேற்கிலிருந்து கிழக்காக வரையப்பட்டுள்ள கற்பனைக் கோடுகள் அகலக்கோடுகளாகும்.
- கோளத்தின் மத்தியில் அமைந்துள்ள கோடு 0^0 அகலாங்காகும். இது மத்தியகோடு எனப்படும்.
- மத்தியகோட்டிற்கு வடக்கேயுள்ள பகுதி வடஅரைக்கோளம் எனப்படும்.
- மத்தியகோட்டிற்கு தெற்கேயுள்ள பகுதி தென்அரைக்கோளம் எனப்படும்.
- மத்தியகோட்டிற்கு வடக்கேயுள்ள அகலாங்குகுள் வடஅகலாங்குகள் எனப்படும்.
- மத்தியகோட்டிற்கு தெற்கேயுள்ள அகலாங்குகள் தென்அகலாங்குகள் எனப்படும்.
- பிரதான அகலக்கோடுகளும் அவற்றுக்கு வழங்கப்படும் பெயர்களும்
  - $23½^0$ வட அகலாங்கு - கடகக்கோடு
  - $66½^0$ வட அகலாங்கு - ஆட்டிக் வட்டம்
  - 90^0 வட அகலாங்கு - வட துருவம்
  - $23½^0$ தென் அகலாங்கு - மகரக்கோடு

- $66\frac{1}{2}^0$ தென் அகலாங்கு - அந்தாட்டிக் வட்டம்
- 90^0 தென் அகலாங்கு - தென் துருவம்



13 நெடுங்கோடுகள்(நெட்டாங்குகள்)

நா.வேலுச்சந்திரன்

- வட தென் முனைவுகளை இணைத்து வரையப்படும் கற்பனைக் கோடுகளாகும்.
- பிரித்தானியாவின் கிறின்வீச் நகரத்தின் ஊடாக வரையப்பட்டுள்ள 0^0 நெட்டாங்கு கிறின்வீச்கோடு என அழைக்கப்படும்.
- கிறின்வீச்கோட்டிற்கு கிழக்கேயுள்ள நெட்டாங்குகள் கிழக்கு நெடுங்கோடுகள் எனப்படும்.
- கிறின்வீச்கோட்டிற்கு மேற்கேயுள்ள நெடுங்கோடுகள் மேற்கு நெடுங்கோடுகள் எனப்படும்.
- கிறின்வீச்கோட்டிற்கு மேற்குப் பக்கமாக 180^0 நெட்டாங்குகளும், கிழக்குப் பக்கமாக 180^0 நெட்டாங்குகளுமாக 360^0 நெட்டாங்குகள் வரையப்பட்டுள்ளன.
- 180^0 நெட்டாங்கானது கிழக்கிற்கும் மேற்கிற்கும் பொதுவானதாக இருக்கும்.
- 180^0 நெட்டாங்கானது சர்வதேச திகதிக்கோடு என அழைக்கப்படும்.
- சர்வதேச திகதிக்கோடு வளைகோடாக வரையப்படுவதற்கான காரணம் தேவையற்ற விதத்தில் நாடொன்றினை பிரிப்பதனைத் தவிர்ப்பதற்காகும்.

14 அகலக்கோடுகள், நெடுங்கோடுகளின் நன்மைகள் எவை?

1 ஓர் இடத்தின் அமைவைக் குறிப்பாக காட்ட உதவுதல்

2 ஓர் இடத்தின் அமைவை மிகச் சரியாகக் காட்ட உதவுதல்

உலகப்படம் குறித்தல் பயிற்சி 1

உலகப்படத்தில் பிரதான அகலக்கோடுகளையும் நெடுங்கொடுகளையும் வரைந்து காட்டுக.

15 பின்வரும் இடங்களின் அகல, நெடுங்கோட்டு அமைவிடங்களைக் குறிப்பிடுக.

கொழும்பு, நியூயோர்க், கொல்கத்தா, டோக்கியோ, இலண்டன்

16 கண்டங்கள்

- புவிமேற்பரப்பு 71 சதவீதம் நீரினால் சூழப்பட்டுள்ளது.
- நீர்ப்பகுதிகள் சமுத்திரங்கள் மற்றும் கடல்களை உள்ளடக்கியது.
- புவிமேற்பரப்பு 29 சதவீதம் நிலத்தினால் சூழப்பட்டுள்ளது.
- நிலப்பரப்பு கண்டங்கள் மற்றும் தீவுகளை உள்ளடக்கியது.
- நீரினால் சூழப்பட்ட பரந்த நிலப்பரப்பு கண்டம் எனப்படும்.
- புவியில் ஏழு கண்டங்கள் அமைந்துள்ளன.
- பருமன் அடிப்படையில் ஏழு கண்டங்களும் பின்வருமாறு
    - ஆசியா (மிகப்பெரிய கண்டம்)
    - ஆபிரிக்கா
    - வட அமெரிக்கா
    - தென் அமெரிக்கா
    - அந்தாட்டிக்கா
    - ஐரோப்பா
    - அவுஸ்ரேலியா (சிறிய கண்டமாகவும், தனி நாடாகவும் கண்டமாகவும் அமைந்துள்ளது)

நா.செல்வமுனிவர்

- நீரினால் சூழப்பட்ட சிறிய நிலப்பரப்பு தீவு எனப்படும்.

- கிறீன்லாந்து(மிகப்பொரிய தீவு), ஐஸ்லாந்து, பிரித்தானியா, கியூபா, மடகஸ்கார், ஜப்பான், பிலிப்பைன்ஸ், போர்னியோ, நியூசிலாந்து

- பின்வரும் கண்டங்களில் அமைந்துள்ள அரசியல் பிரிவுகளைக் குறிப்பிடுக.
  - ஆசியா :- இலங்கை, இந்தியா, சீனா, பாகிஸ்தான், ஜப்பான்
  - ஆபிரிக்கா :- தென் ஆபிரிக்கா, லிபியா. சூடான், அல்ஜீரியா
  - வட அமெரிக்கா :- ஐக்கிய அமெரிக்கா, கனடா
  - தென் அமெரிக்கா :- ஆர்ஜென்ரீனா, பிறேசில், பேரு
  - ஐரோப்பா :- பிரான்ஸ், பிரித்தானியா, ஜேர்மனி

17 சமுத்திரங்கள்

- கண்டங்களுக்கு இடையில் அமைந்துள்ள பரந்த நீர்ப் பகுதிகள் சமுத்திரம் எனப்படும்.
- உலகில் ஐந்து பிரதான சமுத்திரங்கள் உள்ளன.
- சமுத்திரங்களின் பருமன் அடிப்படையில் வருமாறு
  - பசுபிக் சமுத்திரம்
  - அத்திலாந்திக் சமுத்திரம்
  - இந்த சமுத்திரம்
  - அந்தாட்டிக் சமுத்திரம்
  - ஆட்டிக் சமுத்திரம்

நா.செல்வச்சந்திரன்


- கண்டங்களுக்கு அருகிலும், உள்ளகப் பகுதிகளிலும் அமைந்துள்ள சிறிய நீர்ப் பகுதிகள் கடல்கள் எனப்படும்.
  - ஜப்பான் கடல், சீனக்கடல், வடகடல், செங்கடல், மத்தியதரைக்கடல், கஸ்பியன்கடல், ஏரல்கடல், போல்டிக்கடல், அரபிக்கடல், கரீபியன்கடல், கருங்கடல், மஞ்சள்கடல், ஜப்பான் கடல்


- உலகப்படம் குறித்தல் பயிற்சிகள்
  - படம் 1 :- கண்டங்கள், சமுத்திரங்கள்
  - படம் 2 :- தீவுகள்
  - படம் 3 :- அரசியல் பிரிவுகள்
  - படம் 4 :- கடல்கள்


18 பின்வரும் வினாக்களுக்கான விடைகளை எழுதுக.


- நாட்டின் உட்பகுதியில் அமைந்துள்ள கடல்கள்
- இந்துசமுத்திரத்தில் உள்ள தீவுகள்
- கடகக்கோடு ஊடறுத்துச் செல்லும் அல்லது அக்கோட்டில் உள்ள நாடுகள் இரண்டு தருக.
- மகரக்கோடு ஊடறுத்துச் செல்லும் அல்லது அக்கோட்டில் உள்ள நாடுகள் இரண்டு தருக.
- மத்தியகோடு ஊடறுத்துச் செல்லும் அல்லது அக்கோட்டில் உள்ள நாடுகள் இரண்டு தருக.
- இலங்கையின் இரு பக்கங்களிலும் அமைந்துள்ள பிரதான அகலக்கோடுகளைப் பெயரிடுக.
- பின்வரும் தீவுகள் அமைவு பெற்றுள்ள சமுத்திரங்களைக் குறிப்பிடுக.

  கிறீன்லாந்து(மிகப்பொரிய தீவு), ஐஸ்லாந்து, பிரித்தானியா, கியூபா, மடகஸ்கார், ஜப்பான், பிலிப்பைன்ஸ், போர்னியோ, நியூசிலாந்து




Greenland
Iceland
British Isles
Europe
North America
Asia
The Japanese islands
Cuba
Africa
The Philippine islands
Sri Lanka
Borneo
South America
Sumatra
Java
Madagascar
Australia
New Zealand
Antarctica


Norway
Russia
France
United States of America
China
Japan
Algeria
Labia
Saudi Arabia
Pakistan
India
Sudan
Sri Lanka
Brazil
Madagascar
South Africa
Australia
Argentina


Arctic Ocean
Beaufort Sea
Baltic Sea
North Sea
Sea of Okhotsk
Black Sea
Aral Sea
Caspian Sea
Sea of Japan (East Sea)
Mediterranean Sea
Yellow Sea
Pacific Ocean
Pacific Ocean
East China Sea
Caribbean Sea
Atlantic Ocean
Red Sea
Arabian Sea
South China Sea
Indian Ocean
Arafura Sea
Timor Sea
Southern Ocean

அலகு 2

இலங்கையின் தனித்துவம்

புவியியல் ரீதியான தனித்துவம்

01 புவிக்கோளத்தில் இலங்கையின் அமைவிடம் யாது?

- கடகக்கோட்டுக்கும் மகரக்கோட்டிற்கும் இடையில் அமைந்துள்ளது.
- மத்தியகோட்டிற்கு அண்மையில் அமைந்துள்ளது.
- அயன வலயத்தில் அமைந்துள்ளது.
- வடஅரைக்கோளத்தில் கிழக்கு நெடுங்கோட்டில் அமைந்துள்ளது.

02 இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை எது?

பாக்குநீரிணை (32 கி.மீற்றர் நீளமானது)

03 ஒரு இடத்தின் அமைவிடத்தினைக் கூறும் இரு முறைகளும் எவை?

1 சார்பு அமைவிடம்

2 தனி அமைவிடம்

நா.செல்வச்சந்திரன்

04 சார்பு அமைவிடம் என்றால் என்ன?

அண்மித்த சுற்றுப்புறத்தில் உள்ள நிலப்பகுதி மற்றும் சமுத்திரம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் அமைவிடத்தைக் காட்டுதலாகும்.

05 இலங்கையின் சார்பு அமைவிடத்தினைக் குறிப்பிடுக.

வடக்கு :- ஆசியாக் கண்டம்

கிழக்கு :- தென்கிழக்காசிய நாடுகள்

தெற்கு :- இந்து சமுத்திரம்

மேற்கு :- ஆபிரிக்கக் கண்டம்

06 இலங்கையின் வடமேற்குத் திசையில் அமைந்துள்ள தீவுகள் எவை?

நெடுங்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவை தீவு

07 இலங்கை இந்தியாவிற்கு அண்மையில் அமைந்திருப்பதனால் பெற்றுள்ள நன்மைகள் எவை?

1 இலங்கையின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுதல்.

2 பொருளாதார, அரசியல் ஒத்துழைப்புக் கிடைத்தல்.

3 கலாசார ரீதியில் ஒன்றித்துச் செயற்படுதல்.

08 இலங்கையின் தனி அமைவிடத்தைக் குறிப்பிடுக?

அகலாங்கு :- வட அகலக்கோடு 5^0 55' – 90 51'

நெட்டாங்கு :- கிழக்கு நெடுங்கோடு 79^0 41' – 81^0 53'

09 இலங்கையின்

நீளம் :- 432 கி.மீற்றர்

அமைவிடம் :- வடக்கே பருத்தித்துறை முனையிலிருந்து தெற்கே தேவேந்திர முனைவரை

நா.செல்வச்சந்திரன்

09 இலங்கையின்

அகலம் :- 224 கி.மீற்றர்

அமைவிடம் :- மேற்கே கொழும்பிலிருந்து கிழக்கே சங்கமன்கந்த முனைவரை

10 இலங்கைப் படத்தில் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

பருத்தித்துறை, சங்கமன்கந்த முனை, தெய்வேந்திர முறை, கொழும்பு, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, மிகிந்தலை, கதிர்காமம்,

இலங்கையின் கடலெல்லை

11 சர்வதேச சமுத்திரச் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு எது?

1994 நவம்பர் 16

12 கடற்கரையோரத்தைக் கொண்டுள்ள நாடுகளின் கடலெல்லைகள் எவை?

ஆள்புலக் கடலெல்லை :- உலகின் அனைத்துக் கடற்கரையோர எல்லையிலிருந்த 12 கடல்மைல் எல்லை வரை வழங்கப்பட்டுள்ள உரிமை.

அண்மைக் கடலெல்லை :- 12 – 24 கடல்மைல் வரையான வலயம்

தனித்துவமான பொருளாதார வலயம் :- 24 – 200 கடல்மைல் வரையான வலயம்

தரைத்தோற்றப் பிரிவுகள்

13 இலங்கையின் தரைத்தோற்றப் பிரிவுகளையும் அவற்றில் உள்ளடங்கும் பௌதிக அம்சங்களையம் குறிப்பிடுக?

தரைத்தோற்றப் பண்புகள்	உயரம்	பௌதிக அம்சங்கள்
கரையோரச் சமவெளி	30 மீற்றரிலும் குறைவு	குடாக்கள், கடனீரேரிகள், முனைகள், தீவுகள்
உள்ளகச் சமவெளி	30 மீற்றர் - 300 மீற்றர் வரை	சமவெளிகள், எச்சக்குன்றுகள், பாறைத் தொடர்கள்
மத்திய மலைநாடு	300 மீற்றரிலும் கூட	மலைத்தொடர்கள், மேட்டுநிலங்கள், நீர்வீழ்ச்சிகள்,கணவாய்கள்

நா.கல்விச்சந்திரன்

14 பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

மலைகள்	மேட்டுநிலங்கள்	நீர்வீழ்ச்சிகள்	ஆறுகள்
பேதுறுதலாகலா	கண்டி மேட்டுநிலம்	பம்பரகந்த	களனிகங்கை
சிவனொளிபாதம்	வெலிமடை மேட்டுநிலம்	தியலும்	கலாஓயா
அப்புத்தளை	கொஸ்லாந்தை மேட்டுநிலம்	அபடீன்	மகாவலிகங்கை
நமுனுகுல	ஹட்டன் மேட்டுநிலம்	லக்சபான	மாணிக்ககங்கை
கிரிகல்பொத்த		துன்கிந்த	களிகங்கை

15 உள்ளகச் சமவெளியில் அமைந்துள்ள மூன்று எச்சக்குன்றுகள் எவை?

மிகிந்தலை, திம்புலாகல, கதிர்காமம்



காலநிலை

16 இலங்கை அமைந்துள்ள வலயம் எது?

அயனவலயம்

17 இலங்கையின் சராசரி வெப்பநிலை எவ்வளவு?

$27^0C - 30^0C$ வரை

18 இலங்கை மழை பெறும் வழிமுறைகள் எவை?

- பருவக்காற்று மழை
  - வடகீழ் பருவாக்காற்று
    - இலங்கையின் வடகிழக்கு திசைகளிலிருந்து நாட்டினுள் பிரவேசிக்கும் பருவக்காற்றுக்களாகும்.
    - நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் வீசும்
    - இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களுக்கு அதிகமழை கிடைக்கின்றது.
  - தென்மேல் பருவக்காற்று
    - இலங்கையின் தென்மேற்கு திசைகளிலிருந்து நாட்டினுள் பிரவேசிக்கும் பருவக்காற்றுக்களாகும்.
    - மே, ஜூன், ஜூலை ஆகிய மாதங்களில் வீசும்
    - இலங்கையின் மேற்கு, தென்மேற்குப் பிரதேசங்களுக்கு அதிக மழை கிடைக்கின்றது.
- மேற்காவுகை மழை
  - மார்ச், ஏப்ரல், செப்ரெம்பர், ஒக்டோபர் ஆகிய மாதங்களில் வீசும்
  - இடியுடன் கூடிய மழையாக இருக்கும்.
  - பருவக் காற்றுக்கள் வலுவடையும் போது இது வலுவிழக்கும்.
- சூறாவளி மழை
  - ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் வீசும்
  - கடும் காற்றுடன் கூடிய மழை
  - வங்காள விரிகுடாவில் உண்டாகும் காற்றுக் குழப்பங்களினால் சூறாவளி நிகழும்.

ந. செல்லப்பச்சந்திரன்

19 இலங்கையில் வரண்ட காலநிலை நிலவும் காலங்கள் எவை?

பெப்பிரவரி, ஆகஸ்ட்

20 இலங்கையில் வெவ்வேறு பிரதேசங்களில் வளரும் தாவரங்களின் இயல்புகள் எவை? (மழைவீழ்ச்சி, வெப்பநிலை, இடவுயரம் என்பன காரணமாக வேறுபாடு)

- ஈரலிப்பான பகுதிகளில் என்றும் பசுமையான காடுகள் பரவியுள்ளன.
- வறள்வலயம், குறை வறள் வலயத்தில் முட்பற்றைக் காடுகள், புதர்கள் காணப்படுகின்றன.
- மேட்டு நிலங்களை அண்மித்த பகதிகளில் பத்தன, தலாவைப் புல்நிலங்கள் அமைந்துள்ளன.
- மலைப்பிரதேசங்களில் உயரம் குறைந்த தாவரங்கள் உள்ளன.
- கடனீரேரிகள், ஆற்று முகத்துவாரங்களில் கண்டல் தாவரங்கள் உள்ளன.
- கரையோரப் பிரதேசத்திலிருந்து நாட்டின் உட்பகுதிக்குப் பயணிக்கும் ஒருவர் தரைத்தோற்ற வேறுபாடுகள், காலநிலை, காடுகளின் மூடுகைகளின் பல்வகைமை என்பவற்றை அறியலாம்.

நா.செல்வகுமாரன்

இலங்கைச் சமூகம்

21 இலங்கையில் வாழும்

- இனங்கள் - சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர்
- மதங்கள் - பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம்
- மொழிகள் - தமிழ், சிங்களம், ஆங்கிலம்
- கலாசார அம்சங்கள் - சம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், ஆடைஅணிகள், மொழிகள், சடங்குகள்

22 தேசிய மரபுரிமைகளின் வகைகள் எவை?

1 கண்ணால் காணக்கூடிய கலாசார மரபுரிமை / தொட்டுணரக்கூடிய கலாசார மரபுரிமை

I மனிதனால் உருவாக்கப்பட்டவை

அ வழிபாட்டிடங்கள் :- மடுத்தேவாலயம், கதிர்காமம், ஸ்ரீமகாபோதி,

நல்லூர் கோவில்.

ஆ வேறு ஆக்கங்கள் :- சிகிரியா, ரன்மசுப்பூங்கா, யாழ்ப்பாணக் கோட்டை

II இயற்கையாக உருவானவை

சிங்கராஜ வனம், நாமல்பூங்கா, ஹிக்கடுவ கடற்கரை, நீர்வீழ்ச்சிகள்

2 காணமுடியாத மரபுரிமைகள் / தொட்டுணர முடியாத மரபுரிமைகள்

விருந்தினரை உபசரித்தல், முதியோரைக் கௌரவித்தல், பழக்கவழக்கங்கள், மதிப்பு மரியாதை

23 இலங்கையில் உள்ள பின்வருவன அமைந்துள்ள முக்கிய இடங்களைத் தருக?

1 தேசியப் பூங்கா - வில்பத்து, கவுடுல்ல, மாதுறுஓயா, யால, உடவளவை

2 பறவைகள் சரணாலயம் - சுண்டிக்குளம், புந்தல, குமண

3 அழகிய கடற்கரைகள் - நிலாவெளி, பாசிக்குடா, ஹிக்கடுவ

நா.செல்வச்சந்திரன்

24 இலங்கையில் காணப்படும் மனிதனால் உருவாக்கப்பட்ட உலக மரபுரிமைகள் எவை?

சிகிரியா, கண்டி நகரம், தம்புள்ளை விகாரை, காலிக்கோட்டை

25 இலங்கையில் காணப்படும் மனிதனால் உருவாக்கப்பட்ட இயற்கையான உலக மரபுரிமைகள் எவை?

சிங்கராஜவனம், மத்திய மலைநாடு

ஆதிவாசிகள்

26 இலங்கையில் ஆதிவாசி மக்கள் வாழ்கின்ற இடங்கள் எவை?

மகியங்கனை, தம்மானை, ஹென்னானிகல

27 ஆதிவாசிகளுக்கேயுரித்தான கலாசார அம்சங்கள் எவை?

மொழி, பழக்கவழக்கங்கள், ஆடை அணிகள், கருவிகள்

28 ஆதிவாசிகளின் வாழ்வாதரத் தொழில்கள் எவை?

பயிர்ச்செய்கை, வேட்டையாடுதல், காட்டுத் திரவியங்களைச் சேகரித்தல்

29 நவீன மக்கள் சமூகத்தக்கு இசைவாக மாறியுள்ள ஆதிவாசிகள் வாழும் இடம் எது?

ஹென்னானிகல

30 ஹென்னானிகலவில் வாழும் ஆதிவாசிகளிடம் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்கள் எவை?

1 முறையான பாடசாலைக் கல்வியைப் பெறுதல்.

2 உயர் கல்விக்குள் பிரவேசித்தல்.

3 இலத்திரனியல் உபகரணங்களைப் பயன்படுத்துதல்.

நா.செல்வச்சந்திரன்

கலாசார அம்சங்களும் விழாக்களும்

31 இலங்கையில் வாழும் பின்வரும் மதத்தவர்களால் கொண்டாடப்படும் விழாக்கள் எவை?

1 இந்து :- தீபாவளி, தைப்பொங்கல், புத்தாண்டு

2 பௌத்தம் :- பொசன், வெசாக், எசலபெரஹரா

3 இஸ்லாம் :- ரம்ழான், ஹஜ்ஜுப் பெருநாள்

4 கிறிஸ்தவம் :- நத்தார், உயிர்த்த ஞாயிறு, பெரியவெள்ளி

அலகு 2 இன் தொடர்ச்சி

சமூக அபிவிருத்தி

01 இலங்கை அமைவு பெற்றுள்ள ஆசியப் பகுதி எது?

தென்னாசியா

02 அந்நாடுகளுள் உயர்ந்த சமூக அபிவிருத்தி மட்டத்தைக் கொண்டுள்ள நாடு எது?

இலங்கை

03 தென்னாசிய நாடுகள் எவை?

மாலைதீவு, இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ், நேபாளம், பூட்டான்.



படவேலை :- தென்னாசிய நாடுகளை குறித்துக் காட்டுவார்.

04 சமூக அபிவிருத்தி மட்டத்தை அளவிடுவதற்கு உதவும் குறிகாட்டிகள் எவை?

1 ஆயுள் எதிர்பார்ப்பு (வருடங்கள்)

2 எழுத்தறிவு (15 வயதும் அதற்கு மேலும்)

3 பிறப்பு வீதம் (1000 இற்கு)

4 சிசுமரணவீதம்(1000 இற்கு)

5 பிரசவ மரண வீதம்(1000 இற்கு)

05 இலங்கையின் எழுத்தறிவு வீதம் எவ்வளவு?

92வீதம்

06 தென்னாசிய நாடுகளுள் உயர் எழுத்தறிவு வீதத்தைக் கொண்டுள்ள நாடு எது?

மாலைதீவு(98)

07 இலங்கையில் சமூக அபிவிருத்தி மட்டம் உயர்வாக இரப்பதற்கான காரணிகள் எவை?

1 சிறந்த போசாக்குள்ள உணவைப் பெறுதல்

1 நோய்களுக்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய சக்தி அதிகரித்தல்.

2 உள, உடல் ஊட்டம் அதிகரிக்கும் 3 ஆயுள் எதிர்பார்ப்பு மேம்பாடடைதல்.

2 மருத்துவ சுகாதாரத்துறை வசதிகள் மேம்பாடடைதல்

1 ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரித்தல்

2 சிசுமரணவீதம் குறைவடைதல்

3 கர்ப்பிணித் தாய் மரணவீதம் குறைவடைதல்

3 கல்வி வசதிகள் முன்னேற்றமடைதல்

1 எழுத்தறிவு முன்னேற்றமடைதல்

2 வாழ்க்கைத் தரம் உயர்வடைதல்.

3 சிறந்த தொழில் வாய்ப்புக்கள் கிடைத்தல்.

4 ஆரோக்கியமான வாழ்க்கை வாழத் தூண்டப்படுதல்.

5 நல்மனப்பாங்குகள் ஏற்படுதல்.

4 கல்வி, சுகதாரம் என்பவற்றை இலவசமாக வழங்கும் அரசின் நலன்புரி நடவடிக்கை

ஸ்ரீ செல்வச்சந்திரன்

அலகு 03

இலங்கையின் நிலத்தோற்றம்

01 இலங்கை அமைந்துள்ள சமுத்திரம் எது?

இந்து சமுத்திரம்

02 இலங்கையின் பரப்பளவு எவ்வளவு?

65610 சதுர கிலோமீற்றர்

03 இலங்கையில் காணப்படும் முக்கிய நிலத்தோற்றங்கள் எவை?

1 மலைநாட்டு நிலத்தோற்றம்

2 உலர்வலய நிலத்தோற்றம்

3 ஈரவலய நிரத்தோற்றம்

4 யாழ்ப்பாணக் குடாநாடும் அதனை அண்டிய தீவுகளின் நிலத்தோற்றமும்

5 கரையோர நிலத்தோற்றம்

04 மலைநாட்டு நிலத்தோற்றம்


1 கடல் மட்டத்திலிருந்து 300 மீற்றருக்கு மேற்பட்ட உயரமுள்ள நிலங்கள் மலைநாட்டு நிலத்தோற்றத்திற்குள் அடங்கும்.

செல்வச்சந்திரன்


2 இலங்கையின் மத்திய மலைநாட்டிலும், சப்பிரகமுவ பகுதிகளிலும் இவ்வாறான நிலத்தோற்றம் காணப்படும்.

3 இதன் பிரதான பௌதிக அம்சங்களாக பின்வருவன அமைந்துள்ளன.


- மேட்டு நிலங்கள் - கண்டி மேட்டுநிலம், வெலிமடை மேட்டுநிலம், கொஸ்லாந்தை மேட்டுநிலம், ஹட்டன் மேட்டுநிலம், மகாவலத்தன்ன மேட்டுநிலம்



- மலைத்தொடர்கள் - நக்கிள்ஸ், சிவனொளிபாதம், பீதுறுதலாகா மலை, நமுனுகுல




- கணவாய்கள் - கலகெதர, ஹப்புத்தளை, பலன, உன்னஸ்கிரிய, கடுகண்ணாவ



நா.செல்வச்சந்திரன்

- நீர்வீழ்ச்சிகள் - அபடீன், லக்சபான, துன்கிந்த, பம்பரகந்த, தியலும



4 மலைநாட்டு நிலத்தோற்றத்தில் இடம்பெறும் மானிடச் செயற்பாடுகள்

- தேயிலைப் பயிர்ச்செய்கையும் அதனுடன் இணைந்த தேயிலைத் தொழிற்சாலைகள், அதிக எண்ணிக்கையான தொழிலாளர்கள், தொழிலாளர்களின் வீடுகள், விருத்தியடைந்த வீதி வலைப்பின்னல் என்பன காணப்படுகின்றது.
- வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டு செய்கை பண்ணப்படும் காய் கறிகள், பழங்கள், பூச்செய்கை என்பன காணப்படும்.
- புல் நிலங்களை அண்டிய விலங்கு வேளாண்மை நடைபெறுதல்.
- உள்நாட்டு, வெளிநாட்டு பயணிகளின் சுற்றுலாக் கைத்தொழில் இடம்பெறுதல்.
- அதனோடு தொடர்புடைய சுற்றுலா விடுதிகள், ஓய்வு, பொழுதுபோக்கு, விளையாட்டு, வழிகாட்டல் என்பன மேற்கொள்ளப்படல்.

உலர் வலய நிலத்தோற்றம்

01 இலங்கையில் நீர்வளம நாகரிகம் ஆரம்பித்த பிரதேசம் எது?

உலர் வலயம்

ஆ.செல்வச்சந்திரன்

02 உலர் வலய நிலத்தோற்றத்தில் அடங்கும் பிரதேசங்கள் எவை?

வடக்கு, வடமத்திய, கிழக்கு, தென்கிழக்குப் பிரதேசம்

03 உலர் வலய நிலத்தோற்றத்தை ஒழுங்கமைக்கும் காரணிகள் எவை?

கடும் வரட்சி, அதிக வெப்பம், நிச்சயமற்ற குறைந்த மழைவீழ்ச்சி, உயர் ஆவியாக்கம்

04 உலர் வலய நிலத்தோற்றத்தின் பௌதிக அம்சங்கள் எவை?

1 சமவெளிகள், ஆங்காங்கே அமைந்த எச்சக் குன்றுகள் காணப்படுதல்.

2 வருடத்தின் ஒரு காலப் பகுதியில் வற்றிப்போகும் நதிகள் காணப்படுதல்.

3 குட்டையான தடித்த பட்டைகளையும் சிறிய இலைகள் கொண்ட மரங்கள் காணப்படல்.

4 அரைகுறை வறள் வலயக் காலநிலைக்கேற்ப வளர்ந்துள்ள புற்கள், பற்றைக் காடுகள் காணப்படல்.

05 அரைகுறை வறள் வலயக் காலநிலை நிலவும் பிரதேசங்கள் எவை?

மன்னார், புத்தளம், அம்பாந்தோட்டை

06 உலர் வலயத்தில் அமைந்துள்ள எச்சக்குன்றுகள் எவை?

சிகிரியா, தம்புள்ள, ரிட்டிகல, கதிர்காமம்

07 உலர் வலயத்தில் புராதன காலத்திலிருந்தே பாதுகாப்பு அரணாக அமைந்துள்ள குன்று எது?

சிகிரியா

08 உலர் வலய நிலத்தோற்றத்தில் இடம்பெறும் மானிடச் செயற்பாடுகள் எவை?

1 நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்டு நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

2 நெற்செய்கையோடு தொடர்புடைய வகையில் அரிசி ஆலைகளும், அரிசி மாவினை அடிப்படையாகக் கொண்ட இணைந்த தொழில்களும் காணப்படல்.

நா.செல்வச்சந்திரன்

3 மகாவலி நீரின் மூலம் பயிர் செய்வதற்கு ஏற்ற வகையில் சகல வசதிகளுடனும் ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட விவசாயக் குடியேற்றங்கள் காணப்படல்.

4 மழைவீழ்ச்சியைப் பயன்படுத்தி சேனைப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

09 உலர் வலய நிலத்தோற்றத்தில் அடங்கியுள்ள சரணாலயங்கள் எவை?

யால, வில்பத்து, குமண

10 உலர் வலயத்தில் அமைந்துள்ள தேசிய பூங்காக்கள் எவை?

சோமாவதி, மாதுறுஓயா, வஸ்கமுவ

11 உலர்வலயத்தில் அமைவு பெற்றுள்ள முக்கிய வழிபாட்டுத் தலங்கள் எவை?

அனுராதபுரம் - புனித வெள்ளரசு மரம் (மகாபோதி), மன்னார் - மடு மாதா கோவில்,

திருகோணமலை - கோனேச்சரம் ,

12 உலர் வலய மக்கள் நீர்ப்பற்றாக்குறைகளை எவ்வாறு தீர்க்கின்றனர்?

மழை நீரை குளங்களில் சேகரிப்பதன் மூலம்

13 உலர் வலயத்தில் அமைந்துள்ள நதிகள் எவை?

மல்வத்துஓயா, கலாஓயா, மகாவலிகங்கை, கல்லோயா, தெதுறுஓயா

14 உலர் வலயத்தில் அமைந்துள்ள குளங்கள் எவை?

ஜோதவாவி, கலாவாவி, மகாகணதரவவாவி, கந்தளாய்குளம், பராக்கிரம சமுத்திரம்



படவேலை :-

1 **பின்வரும் இடங்களை குறித்துக் காட்டுக.**

மன்னார், வவுனியா, திருகோணமலை, பொலநறுவை,

2 **பின்வரும் நதிகளை குறித்துக் காட்டுக.**

கலாஓயா, மல்வத்துஓயா, மகாவலிகங்கை, கல்லொயா, வளவைகங்கை, கிரிந்திஓயா, தெதுறுஓயா, மாதுறுஓயா

3 **பின்வரும் குளங்ளை குறித்துக் காட்டுக.**

மஹாகணதரவாவி, நாச்சதுவா, கலாவரி, இராஜாங்களை நீர்த்தேக்கம், மின்னேரியா, பராக்கிரம சமுத்திரம், சேனநாயக்கா சமுத்திரம், உடவளவை நீர்த்தேக்கம், லுனுகம் வெஹர நீர்த்தேக்கம்

ஈரவலய நிலத்தோற்றம்

01 ஈரவலய நிலத்தோற்றம் காணப்படும் பிரதேசங்கள் எவை?



02 ஈர வலய நிலத்தோற்றத்தின் பௌதிக அம்சங்கள் எவை?

சமவெளிகள், மேடு பள்ளங்களுடன் கூடிய நிலத்தோற்றம், வருடம் முழுவதும் பாய்ந்தோடும் நதிகள், சேற்று நிலங்கள்

03 நிலத்தோற்ற அமைப்பில் மாற்றம் ஏற்படுவதற்கான காரணங்கள் எவை?

அடிக்கடி ஏற்படும் வெள்ளப்பெருக்கும், நிலச்சரிவும்

04 அடிக்கடி வெள்ளப்பெருக்கிற்கு உட்படும் நதிகள் எவை?

களனிகங்கை, களுகங்கை, ஜின்கங்கை, பெந்தோட்டை கங்கை

05 ஈரவலவய நிலத்தோற்றத்தில் இடம்பெறும் மானிடச் செயற்பாடுகள் எவை?

1 கடற்கரையோரத்தில் தென்னைச் செய்கை, நதிப் பள்ளத்தாக்குகளில் நெற்செய்கை, சாய்வுகளில் தேயிலை, இறப்பர் பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்படுகின்றமை.

2 நகர. கைத்தொழில், சேவை மத்திய நிலையங்களாக கொழும்பு, கம்பஹா, மாத்தறை, காலி, நீர்கொழும்பு, கண்டி, களுத்துறை ஆகியன அமைந்துள்ளன.

© செல்வச்சந்திரன்

3 கட்டுநாயக்கா, பியகம, கொக்கல ஆகிய இடங்களில் சுதந்திர வர்த்தக வலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

4 கைத்தொழில் குடியேற்றங்கள் இரத்மலானை, எக்கல நகரங்களை அண்டி அமைக்கப்பட்டுள்ளன.

5 வைத்தியசாலைகள், பாடசாலைகள், பொலிஸ் நிலையங்கள், வங்கிகள், நீதிமன்றங்கள் என்பன காணப்படுகின்றன.

6 விருத்தியடைந்துள்ள வீதி வலைப்பின்னல்கள், அதிவேகப் பெருந்தெருக்கள், புகையிரத வீதிகளுடன் கூடிய விருத்தியடைந்த போக்குவரத்து முறைகள் உள்ளன.

06 இலங்கையின் தலைநகரம் எது?

ஸ்ரீ ஜெயவர்த்தனபுரக்கோட்டை

07 இலங்கையின் வர்த்தக நகரம் எது?

கொழும்பு

08 ஈரவலய நிலத்தோற்றத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகள் எவை?

களிமண் அகழ்தல், வரையறையின்றி இடம்பெறும் இரத்தினக்கல் அகழ்தல், காடழிப்பு, சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அபிவிருத்தி

09 ஈரவலய நிலத்தோற்றத்தில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் எவை?

நிலச்சரிவுகள், தரைக்கீழ் நீர் ஊற்றுக்கள் வற்றுதல், கட்டடங்கள் இடிந்த விழுதல், நுளம்புகளின் பெருக்கம்.

படவேலை

1 பின்வரும் இடங்களை குறித்துப் பெயரிடுக.

நீர்கொழும்பு, கம்பஹா, கட்டுநாயக்கா, எக்கல, கம்பஹா, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை,

2 பின்வரும் நதிகளை குறித்துப் பெயரிடுக.

மகாஓயா, களனிகங்கை, களுகங்கை, பெந்தோடடை கங்கை, ஜின்கங்கை, நில்வளகங்கை, நில்வளகங்கை

யாழ்ப்பாணக் குடாநாடும் அதனை அண்டிய தீவுகளின் நிலத்தோற்றமும்

நிலசெல்வகுமாரன்

01 இலங்கையின் வடமேற்குத் திசையில் அமைந்தள்ள தீவுகள் எவை?

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு

02 இப்பிரதேசத்தின் முக்கிய பௌதிக அம்சங்கள் எவை?

சமவெளிகள், களப்புக்கள், தீவுகள், மணல்வெளிகள், வளமான சிவப்பு மண், சுண்ணாம்புக்கல், தரைக்கீழ் நீர், குறைவான மழைவீழ்ச்சி, உயர் ஆவியாக்கம்

03 இப்பிரதேச்தின் மானிடச் செயற்பாடுகள் எவை?

1 தரைக்கீழ் நீரைப் பயன்படுத்தி விவசாயம் மேற்கொள்ளப்படல். (உருளைக்கிழங்கு, சின்ன வெங்காயம், பிற்றூட், மிளகயர், மா, வாழை, திராட்சை)

2 கரையோரத்தில் இடம்பெறும் மீன்பிடிக் கைத்தொழில், பனை சார் கைத்தொழில், உப்பு உற்பத்தி என்பன இடம்பெறுகின்றது.

3 இந்து சமயத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட கலாசாரம் காணப்படல்.

4 சுற்றுலாக் கைத்தொழில் இடம்பெறுதல்(நீச்சல், அழகான கடற்கரைகள், சுண்டிக்குளம் பறவைகள், சரணாலயம், நயீனாதீவு கோயில்)

படவேலை

1 பின்வரும் இடங்களை குறித்துப் பெயரிடுக.

ஆனையிறவு, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், நெடுந்தீவு, நயினாதீவு

கரையோர நிலத்தோற்றம்

01 இலங்கையின் கரையோர நிலத்தோற்றத்தில் உள்ளடங்கும் பௌதிக உறுப்புக்கள் எவை?

தீவுகள், குடாக்கள், களப்புக்கள், முனைகள், சதுப்பு நிலங்கள், மணல் வெளிகள், முருகைக்கற்பாறைகள்

02 கரையோர நிலத்தோற்றத்தில் இடம்பெறும் மானிடச் செயற்பாடுகள் எவை?

1 தங்காலை, அம்பாந்தோட்டை, பாசிக்குடா, அறுகம்குடா, போன்ற அழகான கரையாரப் பகுதிகள், மனதைக் கவரும் முருகைக்கற்பாறைகளைக் கொண்ட ஹிக்கடுவ ஆகியவை சுற்றுலாப் பயணிகளை பெரிதும் கவர்ந்த இடங்காளகும்.

நா.செல்வசந்திரன்

2 இப்பிரதேசங்களி அமைக்கப்பட்டுள்ள சுற்றுலாப் பணிகள் வருகையை ஊக்குவிக்கும் காரணிகள் வருமாறு

1 விடுதிகள்
2 உணவகங்கள்
3 தொல்பொருள் காட்சியகங்கள்
4 வெளிச்ச வீடுகள்
5 சமய முக்கியத்துவமிக்க இடங்கள்
6 சரணாலயங்கள்
7 உல்லாச விடுதிகள்
8 தேசியப் பூங்காக்கள்

3 கரையோரத்தை அணிமித்துள்ள ஆழமற்ற டகற்பரப்புக்கள், கடனீரேரிகள், சதுப்பு நிலங்கள், ஆகியவற்றில் மீன்பிடிக் கைத்தொழில் இடம்பெறுகின்றது. கரையோரம் வழியே மீன்பிடிக் குடியிருப்புக்களும் பரந்துள்ளன.

4 கரையோரத்தில் காணப்படும் வளங்களைப் பயன்படுத்தி பல்வேறு கைத்தொழில்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

உதாரணம் :- தும்புக் கைத்தொழில், கருவாடு காயவைத்தல்,

03 கரையோர நிலத்தோற்றத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் மானிடச் செயற்பாடுகள் எவை?

1 கரையோரங்களில் முருகைக்கற்பாறைகளை அகழ்தல்

2 கரையோரங்களில் மண் அகழ்தல்

3 முறையற்ற விதத்தில் கட்டடங்களை அமைத்தல்.

படவேலை

1 பின்வரும் இடங்களை இலங்கைப்படத்தில் குறித்தக் காட்டுக.

பருத்தித்தறை முனை, நல்லூர் கந்தசாமி கோவில், சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயம், யாழ்ப்பாணம், நெடுந்தீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை, மன்னார், தலவில புனித அந்தோனியார் தேவாலயம், புத்தளம், நீர்கொழும்பு, கொழும்பு, ஹிக்கடுவ, காலி, மாத்தறை, தங்காலை, அம்பாந்தோட்டை, தீகவாவி, மட்டக்களப்பு, பாசிக்குடா, சேருவில, திருகோணமலை, நிலாவெளி, கொக்காவில், முல்லைத்தீவு



அலகு 4

இயற்கை இடர்களும் அனர்த்தங்களும்

01 இடர்கள் என்றால் என்ன?

இயற்கையாக அல்லது மனிதச் செயற்பாடுகள் காரணமாக மக்களுக்கோ அல்லது உடமைகளுக்கோ சேதம் ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் இடர் எனப்படும்.

02 அனர்த்தம் என்றால் என்ன?

அழிவுகளை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் மக்களுக்கொ அல்லது உடமைகளுக்கோ பேரழிவுகளை ஏற்படுத்தி நாட்டு அரசினால் அழிவுகளுக்கான பிரதியீடுகளை வழங்கமுடியாத சந்தர்ப்பத்தில் அது அனர்த்தம் எனப்படும்.

03 அனர்த்தங்களின் வகைகள் எவை?

1 இயற்கை அனர்த்தங்கள்

2 மனிதச் செயற்பாடுகளால் ஏற்படும் அனர்த்தங்கள்

நா.செல்வச்சந்திரன்

04 இயற்கை அனர்த்தங்கள் எவை?

சுனாமி, நிலநடுக்கம், எரிமலை, இடி மின்னல், சூறாவளி, வரட்சி, வெள்ளப்பெருக்கு, காட்டுத்தீ, மண்சரிவு,

05 மனிதச் செயற்பாடுகளால் ஏற்படும் அனர்த்தங்கள் எவை?

யுத்தங்கள், காட்டுத்தீ, வாகன விபத்துக்கள், கட்டடங்கள் இடிந்து விழுதல்

06 அனர்த்தங்களால் ஏற்படும் பாதிப்புக்கள் எவை?

1 மனித உயிர்கள் இழக்கப்படுதல்.

2 உடமைகள் அழிவடைதல்

3 உட்கட்டமைப்பு வசதிகள் பாதிக்கப்படுதல்

4 இயற்கைச் சூழல் பாதிப்படைதல்

07 இலங்கையில் நிகழும் இயற்கை அனர்த்தங்கள் எவை?

சுனாமி, இடி மின்னல், சூறாவளி, வரட்சி, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு

08 வரட்சி

- ❖ வரட்சி என்றால் என்ன :- குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் குறிப்பிட்ட ஒரு காலப் பகுதியில் பெற்றுக்கொள்ள வேண்டிய சராசரி மழைவீழ்ச்சி நீண்டகாலமாகக் கிடைக்காமல் போவதால் சுற்றாடலில் ஏற்படும் வரண்ட தன்மை வரட்சி எனப்படும்.
- ❖ இயற்கை அனர்த்தங்களில் குறைந்த முக்கியத்துவம் கொடுக்கப்படும் ஓர் அனர்த்தமாகும்.
- ❖ இலங்கையில் வரட்சியினால் பாதிக்கப்படும் மாவட்டங்கள்:-

  யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, அம்பாந்தோட்டை, திருகோணமலை
- ❖ வரட்சி ஏற்படுவதற்கான காரணங்கள்
  - ➢ நீண்ட காலப்பகுதியில் மழைவீழ்ச்சி குறைவடைதல்.
  - ➢ காடுகளுக்கு தீ வைத்தல்
  - ➢ வரட்சியான காற்றுக்கள் வீசுதல்
  - ➢ பூகோள வெப்பம் அதிகரித்தல்
  - ➢ தாவரப் போர்வையை அகற்றுதல்

நா.செல்வச்சந்திரன்

- ❖ வரட்சியானல் ஏற்படக்கூடிய இருவேகையான பாதிப்புக்களும் எவை?
  - ➢ மனிதனுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்
    - ▪ நீர்ப்பற்றாக்குறை ஏற்படல்.
    - ▪ விவசாய அறுவடை அழிவடைதல்.
    - ▪ உணவுப் பற்றாக்குறை ஏற்படல்.
    - ▪ தொற்று நோய்கள் பரவதல்.
    - ▪ விலங்குகளுக்கு பாதிப்பு ஏற்படுதல்.
  - ➢ சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்
    - ▪ சூழல் வெப்பம் அதிகரித்தல்.
    - ▪ தரைக்கீழ் நீர் மட்டம் குறைவடைதல்.
    - ▪ காட்டுத் தீ ஏற்படுதல்.
    - ▪ காடுகள் அழிவடைதல்.
    - ▪ மண வளமிழத்தல்.



(வரட்சி ஏற்படும் மாவட்டங்களை இலங்கைப் படத்தில் குறித்துக் காட்டுக)

09 வெள்ளப்பெருக்கு

- ❖ வெள்ளப்பெருக்கு என்றால் என்ன :- ஆறுகள், குளங்கள், நதிகள், நீர்த்தேக்கங்கள் என்பவற்றில் குறுகிய காலப்பகுதியில் அதிகளவான நீர் சேர்ந்து நிரம்பிப் பெருக்கெடுக்குமாயின் வெள்ளப்பெருக்கு எனப்படும்.
- ❖ இலங்கையின் அனைத்த மாவட்டங்களிலும் இவ்வனர்த்தம் ஏற்படலாம்.
- ❖ இலங்கையில் வெளிளப்பெருக்கினால் பாதிக்கப்படும் மாவட்டங்கள்

  ஈரவலய மாவட்டங்கள் :- கம்பஹா, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி,

  உலர் வலய மாவட்டங்கள் :- பொலநறுவை, மட்டக்களப்பு, அம்பாறை
- ❖ வெள்ளப்பெருக்கிற்கான காரணங்கள்
  - ➢ தொடர்ந்து பெய்யும் கடும் மழை.
  - ➢ மலைநாட்டுப் பகுதிகளில் காடுகளை அழித்தல்.
  - ➢ தாழ்நிலங்களை நிரப்புதல்.
  - ➢ ஆற்றுப்படுக்கைகளில் மணல் அகழ்தல்
- ❖ வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் பாதிப்புக்கள்
  - ➢ விவசாய நிலங்கள் சேதமடைதல்.
  - ➢ அன்றாட செயற்பாடுகள் பாதிக்கப்படுதல்.
  - ➢ தொற்று நோய்கள் பரவுதல்.
  - ➢ வடிகால் தொகுதிகள் தடைப்படுதல்.
  - ➢ குடிநீர் மாசடைதல்.
  - ➢ மனித உயிர்கள் இழக்கப்படுதல்.
  - ➢ சொத்துக்கள் அழிவடைதல்.
  - ➢ உட்கட்டமைப்பு வசதிகள் பாதிக்கப்படுதல்(மின்சாரம், தொலைபேசி, வீதிகள்)



நா.தேவ்வசந்திரன்

(வெள்ளப்பெருக்கு ஏற்படும் மாவட்டங்களை இலங்கைப் படத்தில் குறித்துக் காட்டுக)

10 நிலச்சரிவு

- உயர்நிலப் பகுதி ஒன்றின் பெரும் பகுதி பாறைகள், பரல்கள், மண் திணிவுகளுடன் சரிவொன்றில் கீழிறங்குதல் நிலச்சரிவு என அழைக்கப்படும்.
- இலங்கையில் தற்காலத்தில் அடிக்கடி நிகழும் அனர்த்தம் இதுவாகும்.
- நிலச்சரிவு ஏற்படுவதற்கான இயற்கைக் காரணிகள்
  - இடைவிடாது தொடர்ந்து பெய்யும் மழை.
  - செங்குத்தான சாய்வு கொண்ட நிலங்கள்.
  - வானிலையாலழிதலுக்குட்பட்ட பாறைப் பட்டைகள் காணப்படுதல்.
  - புவி நடுக்கங்கள்
- நிலச்சரிவு ஏற்படுவதற்கான மானிடக் காரணிகள்
  - மலைப்பிரதேசங்களில் காடுகளுக்கு தீ வைத்தல்.
  - பொருத்தமான திட்டமிடலின்றி மலைப் பிரதேசங்களில் நிலத்தைப் பயன்படுத்தல்.
  - கட்டட நிர்மாண நடவடிக்கைகளின் போது போதியளவு நிலத்தை ஆய்வு செய்யாமை.
  - இயற்கையான நீர் வழிகளைத் தடைசெய்தல்.
  - மேட்டு நிலங்களில் நீரைச் சேமித்து வைத்திருவத்தல்.
- இலங்கையில் நிலச்சரிவு ஏற்படும் மாவட்டங்கள்
  மாத்தளை, கண்டி, நுவரேலியா, பதளை, கேகாலை, இரத்தினபுரி
- நிலச்சரிவினால் ஏற்படும் பாதிப்புக்கள்
  - உயிர், உடமைகள் அழிவடைதல்.
  - பயிர் நிலங்கள் பாதிக்கப்படுதல்.
  - சூழல் மாசடைதல்
  - உட்கட்டமைப்பு வசதிகள் அழிவடைதல்.
  - மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படல்.
- நிலச்சரிவை தவிர்த்துக்கொள்வற்கான நடவடிக்கைகள்
  - மலைச்சரிவில் உள்ள காடுகளைப் பாதுகாத்தல்.
  - கட்டட நிர்மாணிப்பின் போது கவனம் செலுத்துதல்.
  - உயர் நிலங்களில் நீரைச் சேமித்தலைக் குறைத்தல்
  - இயற்கையான நீர் வழிகளை தடைசெய்யாதிருத்தல்.



நா. தேவேந்திரன்

(மண்சரிவு ஏற்படும் மாவட்டங்களை இலங்கைப் படத்தில் குறித்துக் காட்டுக)

11 சூறாவளிகள்

- ஒரு சுழி வடிவில் மிகவும் வேகமாகச் சுழன்று பலமான வீசும் காற்று சூறாவளி எனப்படும்.
- சூறாவளி ஏற்படுவதற்கான காரணங்கள்
  - அயன மண்டலப் பகுதிகளில் நிலவும் உயர் வெப்பம்.
  - அதன் காரணமாக உருவாகும் தாழமுக்க வலயங்களும்.
- இலங்கை அயன மண்டலத்தில் உள்ள நாடாகும்.
- இலங்கையைத் தாக்கும் சூறாவளிகள் வங்காள விரிகுடாப் பகுதியில் தோன்றுகின்றன.
- இலங்கையின் கிழக்கு மற்றும் வடகிழக்குக் கரையோரம் வழியே நுழைந்து வடமேற்குக் கரையோரமாக தீவினை விட்டு வெளியேறுகின்றன.
- சூறாவளியின் தாக்கம் அதிகம் ஏற்படும் மாவட்டங்கள்
  யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பொலநறுவை
- சூறாவளியினால் ஏற்படும் பாதிப்புக்கள்
  - பயிர்ச்செய்கை அழிவடைதல்.
  - கடும் மழை, காற்று காரணமாக உயிர், உடமை இழக்கப்படுதல்.
  - மரங்கள் விழுவதால் மின்சாரம்,போக்குவரத்து, தொலைத்தொடர்பு பாதிக்கப்படுதல்.
  - கரையோரங்களில் கடல் பெருக்கெடுத்தல்.
- சூறாவளியின் பாதிப்புக்களைக் குறைக்கும் வழிகள்
  - உயர்ந்த மரங்களை வெட்டுதல்.
  - வானிலை செய்திகளை தொடர்ந்து கேட்டல்.
  - வெளியே செல்வதைக் குறைத்தல்.
  - உடையும் பொருட்களை பாதுகாப்பாக வைத்தல்.

நா.செல்வச்சந்திரன்



(சூறாவளி ஏற்படும் மாவட்டங்களை இலங்கைப் படத்தில் குறித்துக் காட்டுக)

12 இடி மின்னல்

- ❖ முகில் ஒன்றினுள் உண்டாகக்கூடிய இலத்திரனியல் செயற்பாடு காரணமாக ஒன்றுக்கொன்று எதிரான இரண்டு சக்திகளுக்கிடையே நடைபெறும் மின்சக்தியை விடுவித்தல் செயன்முறை மின்னல் எனப்படும்.
- ❖ இடி மின்னல் தாக்கம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள்
  - ➢ உயரமான மரங்களின் கீழே நிற்றல்.
  - ➢ திறந்த வெளிகளில் நிற்றல்.
  - ➢ மின்சார உபகரணங்களைப் பயன்படுத்தல்.
  - ➢ தொலைபேசியில் உரையாடுதல்.
- ❖ மின்சக்தியை விடுவித்தல் நடக்கும் முறைகள்
  - ➢ முகில் ஒன்றின் உள்ளே நடைபெறல்.
  - ➢ இரண்டு மேகங்களுக்கு இடையெ நடைபெறல்.
  - ➢ முகில் ஒன்றில் இருந்து பூமிக்கு
- ❖ இலங்கையின் மின்னல் தாக்கம் ஏற்படும் காலப்பகுதி
  மார்ச் - ஏப்ரல், ஒக்டோபர் - நவம்பர் (மேற்காவுகைச் செயன்டுறை இடம்பெறம் காலம்)
- ❖ இடி மின்னல் தாக்கத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள்
  - ➢ மனித உயிர், உடைமைகளுக்குச் சேதம் ஏற்படல்.
  - ➢ மின் கம்பித் தொகுதிகள் பாதிப்படைதல்.
  - ➢ கட்டடங்கள் அழிவடைதல்.
  - ➢ தொடர்பாடல் வலையமைப்பு பாதிப்படைதல்.
- ❖ இடி மின்னல் விபத்துக்களைக் குறைக்கும் வழிகள்
  - ➢ உயர்ந்த மரங்களின் கீழ் நிற்காதிருத்தல்.
  - ➢ பயணங்களைத் தவிர்த்துக்கொள்ளல்.
  - ➢ வீட்டின் எல்லா மின்சுற்றுக்களையும் நிறுத்தி விடுதல்.
  - ➢ திறந்த வெளிகளில் நிற்பதைத் தவிர்த்தல்.
  - ➢ தொலைபேசியை பயன்படுத்தாதிருத்தல்.
  - ➢ உயர் அழுத்த மின்பம்பிகளின் கீழ் கட்டடங்களை அமைக்காதிருத்தல்.

நா. தேவச்சந்திரன்

13 சுனாமி

- ❖ சமுத்திரப்பகுதிகளில் நிகழும் புவிநடுக்கம், நிலச்சரிவு, எரிமலை வெடிப்பு என்பன காரணமாக கரையை நோக்கி வரும் வேகமான அலை சுனாமி எனப்படும்.
- ❖ சுனாமி என்பது ஜப்பான் மொழிச் சொல்லாகும். இதில் Tsu (சு) என்பது துறைமுகம், எனவும் nami (னாமி) என்பது அலை எனவும் பொருள் கொள்ளப்பட்டு துறைமுகஅலை என அழைக்கப்படும்.
- ❖ இலங்கை ஒரு தீவாக அமைந்திருப்பதனால் அனைத்துப் பகுதிகளிலும் இதன் தாக்கம் ஏற்படுவதற்கு சந்தர்ப்பங்கள் உண்டு.
- ❖ 2004 டிசமப்பர், 26இல் பாரிய சுனாமித் தாக்கம் இலங்கையில் ஏற்பட்டது.
- ❖ சுனாமி ஏற்படுவதற்கான காரணங்கள்
  - ➢ சமுத்திரப் பகுதிகளில் இடம்பெறும் நிலநடுக்கம்
  - ➢ கடல் பகுதியில் இடம்பெறும் நிலச்சரிவுகள்
  - ➢ கடற் பகுதிகளில் இடம்பெறும் எரிமலை வெடிப்பு
  - ➢ சமுத்திரப் பகுதியில் ஆகாயக் கற்கள் விழுதல்.
- ❖ சுனாமியால் ஏற்படும் பாதிப்புக்கள்
  - ➢ உயிரிழப்புக்கள்
  - ➢ நீர், நிலம் மாசடைதல்
  - ➢ மக்கள் உள ரீதியாகப் பாதிக்கப்படுதல்
  - ➢ நீர், மின்சாரம், போக்குவரத்து, தொலைத்தொடர்பு போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் பாதிக்கப்படுதல்.
  - ➢ உடைமைகளுக்குச் சேதம் ஏற்படுதல்.
- ❖ சுனாமியில் இருந்து பாதுகாக்கும் முறைகள்
  - ➢ சுனாமியின் அபாய எச்சரிக்கை தொடர்பாக விழிப்புடன் இருத்தல்.
  - ➢ உடனடியாக உயரமான இடங்களை நோக்கிச் செல்லல்.
  - ➢ நேரடியாக அவதானிப்பதற்காக கடற்கரைக்குச் செல்லாதிருத்தல்.
- ❖ இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள்
  யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, அம்பாந்தோட்டை

நா.செல்வச்சந்திரன்

14 புவி நடுக்கம்

❖ புவியின் உட்பகுதியில் நிலவும் உயர் வெப்பம் மற்றும் அமுக்க வேறுபாடுகள் காரணமாகத் திடீரென நிகழும் புவியின் அசைவு புவிநடுக்கம் எனப்படும்.

❖ புவிநடுக்கம் ஏற்படுவதற்கான காரணங்கள்

- ➢ எரிமலை வெடிப்புக்கள்
- ➢ அணுக்குண்டு வெடிப்புக்கள்
- ➢ புவியின் உட்பகுதியில் காணப்படும் அதி உயர் வெப்பம் மற்றும் அமுக்க வேறுபாடுகள்
- ➢ பாரிய நீர்த்தேக்கங்கள் அமைக்கப்படல், பாரிய அளவிலான கட்டட நிர்மாணம் போன்றவற்றினால் புவியின் சமநிலை பாதிக்கப்படுதல்.

❖ புவிநடுக்கத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள்

- ➢ மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்
  - ▪ உயிர்கள், உடமைகள் அழிவடைதல்.
  - ▪ மக்களின் இடப்பெயர்வு
  - ▪ அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்படல்
- ➢ சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்:
  - ▪ பயிர் நிலங்கள் அழிவடைதல்
  - ▪ தாரவங்கள் மற்றும் விலங்குகள் அழிவடைதல்

நா. வில்வகந்திரன்

15 அனர்த்த முகாமைத்துவம் என்பதனுள் உள்ளடங்கும் விடயங்கள் எவை?

1 முன்னாயத்தம்

2 அனர்த்த நிலைமைகளின் போது செயற்படல்

3 அனர்த்தத்தின் பின்னரான நடவடிக்கை

16 அனர்த்த முகாமைத்துவ வட்டதினுள் உள்ளடங்கும் விடயங்களைக் குறிப்பிட்டு அவற்றுக்கான உதாரணங்களையும் தருக?

❖ முன்னாயத்தம்

- ➢ காட்டுப் போர்வையைப் பாதுகாத்தல்.
- ➢ நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாத்தல்.
- ➢ கட்டடங்களின் மின்னல் தாங்கிகளைப் பொருத்துதல்.
- ➢ அனர்த்தம் நிகழக்கூடிய இடங்களை இனங்காணலும் மக்களை வெளியேற்றலும்.
- ➢ அனர்த்தநிலைமைகளை தாங்கக்கூடிய வகையில் வீடுகளை அமைத்தல்.
- ➢

❖ பதிலிறுத்தல்

- பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்லல்.
- உடைமைகளை விட உயிர்களைப் பாதுகாப்பதற்கு முக்கியமளித்தல்
- அகதிகளாகிய மக்களுக்கு உணவு, பானம் வழங்குதல்.
- அசுத்தமான பானம், உணவுகளை உட்கொள்ளாதிருத்தல்.
- விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவிகள், சிகிச்சையளித்தல்.

❖ மீண்டெழுதல்

- அவசர அனர்த்த மத்திய நிலையங்களை அமைத்தல்.
- அனர்த்தத்தின்போது பயன்படுத்த வேண்டிய உயிர் காப்பு அங்கிகளை அறிமுகம் செய்தல்.
- பாரமற்ற பொருட்களை உபயோகிக்கப் பழகுதல்.
- சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல்.
- பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்.

பூகோள காலநிலை மாற்றம்

17 காலநிலை மாற்றம் என்றால் என்ன?

பொதுவான காலநிலைப் பாங்குகளில் நீண்டகால ரீதியிலும், குறுகிய கால ரீதியிலும் நிகழும் மாற்றங்கள் காலநிலை மாற்றங்கள் எனப்படும்.

நா.செல்வச்சந்திரன்

18 காலநிலை மாற்றத்தால் அவதானிக்கக்கூடிய விளைவுகள் எவை?

1 அடிக்கடி வரட்சி ஏற்படுதல்.

2 கடும் குளிர் பருவங்கள் ஏற்படல்.

3 வெள்ளப்பெருக்குகள்

4 சூறாவளிகளின் தாக்கம்

19 காலநிலை மாற்றம் நிகழ்வதற்கான காரணங்கள் எவை?

1 அளவுக்கதிகமாக சுவட்டு எரிபொருள் எரிதல்.

2 காடழிப்பு

3 வளிமண்டலம் வெப்பமடைதல்

4 விவசாய, கைத்தொழில் கழிவுகளை எரியூட்டல்

5 எரிமலை வெடிப்புக்கள்

20 காலநிலை மாற்றத்தால் இலங்கையில் ஏற்படும் தாக்கங்கள் எவை?

- ❖ சமுத்திர நீர் மட்டம் உயர்தல் காரணமாக கரையோரச் சூழற்தொகுதிகள் அழிதல்.
    - ➢ கரையோர நிலப்பகுதிகள் நீரில் மூழ்குதல்.
    - ➢ குடிநீர் மாசடைதல்.
    - ➢ கரையோர அரிப்பு அதிகரித்தல்.
    - ➢ மீன்பிடிக் கைத்தொழில் பாதிக்கப்படுதல்?
    - ➢ கரையோரக் கைத்தொழில்கள் பாதிக்கப்படுதல்.
- ❖ அதிக மழை காரணமாக ஏற்படக்கூடிய அனர்த்தங்கள்
    - ➢ வெள்ளப்பெருக்கு ஏற்படுதல்.
    - ➢ நிலச்சரிவு ஏற்படுதல்.
    - ➢ உயிர் இழப்புக்கள் ஏற்படுதல்
    - ➢ உடைமைகளுக்குச் சேதம் ஏற்படுதல்.
    - ➢ உட்கட்டமைப்பு வசதிகள் பாதிக்கப்படுதல்
- ❖ வளிமண்டல வெப்பம் அதிகரிப்பதன் காரணமாக ஏற்படும் அழிவுகள்
    - ➢ வரட்சி நிலைமை உண்டாதல்.
    - ➢ நீர்ப்பற்றாக்குறை ஏற்படல்
    - ➢ விளைச்சல் குறைவடைதல்
    - ➢ தொற்று நோய்கள், இனங்காண முடியாத நோய்கள் ஏற்படல்.
    - ➢ மன அழுத்தம் உருவாதல்
    - ➢ சரும நோய்கள், சுவாசம் தொடர்பான நோய்கள், கண் நோய்கள் ஏற்படல்.
- ❖ வலுக்சக்தி வளங்களின் உற்பத்தி மற்றும் பயன்பாடு தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகள்
    - ➢ வெப்பம் அதிகரிப்பதன் காரணமாக குளிரூட்டிகள், மின்விசிறிகள் ஆகியனவற்றின் பாவனை அதிகரித்தல்.
    - ➢ நீர்மின்சக்தியின் உற்பத்தி அளவு குறைவடைதல்.
    - ➢ மின்சாரம், அனல் மின்சாரம் என்பவற்றின் கேள்வி அதிகரித்தல்.

நா.செல்வச்சந்திரன்

21 காலநிலை மாற்றங்களை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளக்கூடிய

நடவடிக்கைகள் எவை?

1 காடழிப்பைக் குறைத்தல்.

2 வனப்பகுதிகளைப் பாதுகாக்கப்பட்ட ஒதுக்குப் பகுதிகளாகப் பிரகடனம் செய்தல்.

3 சூழலுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தாத உயிர் வாயுவின் பயன்பாட்டினை அதிகரித்தல்

4 மக்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்.

5 திண்மக் கழிவுகளை முகாமைத்துவம் செய்தல்.

6 புவிக்கோளத்தின் வெப்பத்தை அதிகரிக்கும் வாயுக்களை வெளியிடுவதில் வரையறைகளை ஏற்படுத்துதல்.

நா.செல்வச்சந்திரன்

அலகு 5

படங்களைப் பயன்படுத்தல்

01 இலங்கையில் உள்ள பாடசாலைகளுக்கு தேசப்படத்தொகுதியை வெளியிட்ட அமைப்பு எது?

இலங்கை நில அளவைத் திணைக்களம்

02 தேசப்படப் புத்தகத்தினுடாக அறிந்து கொள்ளக்கூடிய விடயங்கள் எவை?

- ❖ பல்வேறு வகையான படங்கள்
  - ➢ கருப்பொருட்படம்
  - ➢ இடவிளக்கவியல் படம்
- ❖ அளவுத்திட்டம்
  - ➢ நிலத்தில் உள்ள அனைத்தையும் அதே அளவில் படத்தில் காட்ட முடியாது.
  - ➢ எனவே அளவத்திட்டம் ஒன்று பின்பற்றப்படம்.
  - ➢ படங்களின் தேவைகளுக்கேற்ப அளவுத்திட்டமும் மாறுபடும்
- ❖ குறியீட்டு விளக்கம்
  - ➢ அனைத்துத் தகவல்களும் நியமக் குறியீட்டின் மூலம் காட்டப்படும்.
- ❖ படச் சுட்டெண்
  - ➢ அகரவரிசைப்படி தயாரிக்கப்படும் சுட்டெண் காணப்படும்.
  - ➢ படங்களில் நெய்யரி ஒன்று காணப்படுவதோடு அச்சதுரங்களின் கிடையாக எழுத்துக்களாலும் பெயரிடப்பட்டுள்ளது.
  - ➢ நெய்யரியை அடிப்படையாகக் கொண்டு சுட்டெண்ணில் உள்ள எழுத்தையும் இலக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு ஓர் இடத்தின் அமைவிடத்தைக் கண்டறியலாம்.
- ❖ திசை
  - ➢ திசையைக் காட்டும் குறியீடு எப்போதும் காட்டப்படும்.
  - ➢ திசை குறிக்கப்படாது விடின் தலைப்புள்ள திசை வடக்குத் திசை எனக்கொண்டு ஏனைய திசைகள் கணிக்கப்படும்.

செல்வச்சந்திரன்

படங்களைப் பிரதி பண்ணுதல்

03 படங்களைப் பிரதிபண்ணும் முறைகள் எவை?

1 மெல்லிழைக் கடதாசி மூலம் பிரதி பண்ணல்.

2 நிழற்பிரதி எடுத்தல்.

3 அச்சுப்பிரதி எடுத்தல்.

04 மெல்லிழைக்கடாதாசி மூலம் பிரதி பண்ணுவதற்குத் தெவையான பொருட்கள் எவை?

1 மெல்லிழைக் கடதாசி

2 படப் புத்தகம்

3 பென்சில்

4 குண்டூசி

நா.செல்வச்சந்திரன்